**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13.01.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் தேசிய தொழில் முனைவோர் தின விழா 2026**

பாரத பிரதமர் மாண்புமிகு.திரு.நரேந்திர மோடி அவர்களின் ஆலோசனைப்படி தேசிய துளிர் நிறுவன வாரம் ஜனவரி 09 முதல் 16 ம் தேதி வரை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. தொழில் முனைவோர்களின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை கௌரவிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில் நுட்ப வணிக காப்பகத்தில் 09.01.2026 ம் தேதி துளிர் நிறுவன தினம் கொண்டாடப்பட்டது.

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குனர் முனைவர். E.சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார் அவரது உரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில் நுட்ப வணிக காப்பகம் வேளாண் சார்ந்த துளிர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் நிதியுதவி ஊக்குவிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது. இதனால் வேளாண்துறையில் புதிய தொழில் நுட்பங்கள் சார்ந்த தொழில்கள் வளர்ச்சியடைவதோடு வேளாண் பட்டதாரிகள் வேலை வாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் மேம்படுவார்கள் என்று கூறினார்.

திரு.A.V.ஞானசம்பந்தம் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அவர்கள், தொழில் வணிக காப்பகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் முனைப்புகள் குறித்து விளக்கினார். மேலும் 2011 ம் ஆண்டு தொழில் வணிக காப்பகம் நிறுவப்பட்டதிலிருந்து பெற்றுள்ள முக்கியமான மைல்கற்கள் மற்றும் சாதனைகளையும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துவக்க உரை ஆற்றிய இணை வேளாண் இயக்குனர், திருமதி T. தமிழ்ச்செல்வி அவர்கள் வேளாண் தொழில் முனைவோருக்கு தேவையான மத்திய, மாநில அரசின் ஊக்குவிக்கும் நலத்திட்டங்களை ஒரே குடையின் கீழ் செயல்படுத்தும் நிறுவனமாக இப்பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப வணிக காப்பகம் திகழ்கிறது என்றார்.

மேலும் இக்காப்பகம் புதிய தொழில் தொடங்குவதற்குகான ஆர்வத்துடன் வருபவர்களுக்கு தேவையான தொழில் நுட்பம், சந்தைப்படுத்துதல், தேவையான சான்றிதழ், தரக்கட்டுப்பாடு, நிதி ஆலோசனைகள் ஆகிய உதவிகளை அளித்து 660 க்கும் மேற்பட்ட வேளாண் தொழில் முனைவோர்களை இத்தொழில் நுட்ப வணிக காப்பகம் உருவாக்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட தொழில் மையத்தின் துணை இயக்குனர், திருமதி ஸ்ரீ.ராஜேஸ்வரி நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.C.திருமலாராவ், திருமதி.S.ரம்யா, மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, திருமதி.ஹில்டா, (AO) வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகத் துறை, திருமதி. அபிராமி நாகராஜன், மேலாளர், யூனியன் பேங்க் ஆப் இந்தியா, மற்றும் திரு.M.சாமி நாதன், தலைவர், (FIEO) ஆகியோர் கலந்து கொண்டு மத்திய, மாநில அரசின் தொழில் முனைவோருக்கான திட்டங்களை பற்றி உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயக்குனர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். தொழில் வணிக காப்பகத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அவர்கள் திரு.A.V.ஞானசம்பந்தம் நன்றியுரை ஆற்றினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**